4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. **M.** நம்பிராஜன், பி.ஏ., பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**MCOP No. 5/2022** நாள்: **31.07.2025** ம.சா. **2** – முருகன்

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை -

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல, நான் நேரில் பார்த்தேன். விபத்து சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். இந்த வழக்கில் இறந்துபோன பாப்பாத்தியம்மாள் சாலையின் குறுக்கே சென்றார் என்றால் சரியல்ல, சாலையின் ஓரமாக தான் சென்றார். 1–ம் எதிர்மனுதாரர் டாரஸ் வாகனத்தை மெதுவாக தான் ஓட்டி வந்தார் என்றால் சரியல்ல. வேகமாக தான் ஓட்டி வந்தார். இந்த மனுவில் இறந்துபோன பாப்பாத்தியம்மாள் சாலையின் குறுக்கே திடீரென சென்றதால் தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. திடீரென குறுக்கே வந்ததால் தான் விபத்து நடந்தது என்றும், வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து 1–ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. இறந்துபோனவரின் கவனக்குறைவால் தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. இறந்து போன நபருக்கு 70 வயது இருக்கும் என்றால் சரிதான். இந்த மனுவில் உள்ள மனுதாரர்கள் தனிதனியாக வசித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல, ஒன்றாக தான் வசித்து வருகிறார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர்கள் எனக்கு வேண்டிய நபர்கள் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை –

எனக்கு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை எதுவும் வரவில்லை. மனுதாரர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

நான் தாக்கல் செய்துள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை நான் சொல்லி தயார் செய்யப்பட்டவை. காவல் துறையினரிடம் இந்த வழக்கு சம்பவம் குறித்து நான் தான் புகார் கொடுத்தேன். நான் புகார் கொடுக்கவில்லை, வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இறந்துபோன பாப்பாத்தியம்மாள் ஆடு மேய்த்துக்கொண்டிருந்த இடத்திற்கும் நான் ஆடு மேய்த்துக்கொண்டிருந்த இடத்திற்கும் 50 அடி தூரம் இருக்கும். 1 ம் எதிர்மனுதாரர் வாகனத்தை சரியான முறையில் தான் இயக்கி வந்தார் என்றும், ஆடுகள் சாலையின் குறுக்கே சென்று விடக்கூடாது என்று இறந்து போன பாப்பாத்தியம்மாள் தான் திடீரென சாலையின் குறுக்கே சென்தால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை, வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இறந்துபோன பாப்பாத்தியம்மாள் எனக்கு உறவினரல்ல, தெரிந்தவர். விபத்து சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். விபத்து இறந்துபோனவரின் அஜாக்கிரதையால் தான் ஏற்பட்டது, நான் மனுதாரர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/–M.Nambirajan.
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.